

# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி
# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

**முகக் கவசம், உயிர்கவசம்**

**இன்று பிலவ ஆண்டு, மாசி மாதம் 20ஆம் நாள்**

**2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**அதிகாரம் : வாழ்க்கைத் துணைநலம் - குறள் எண் : 60**

**குறள்**

மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

**குறள் விளக்கம்**

குடும்பத்தின் பண்பாடுதான் இல்வாழ்க்கையின் சிறப்பு; அதற்கு மேலும் சிறப்பு நல்ல பிள்ளைகளைப் பெற்றிருப்பது.

<u>பழமொழி ( Proverb )</u>

***A sound mind in a sound body***

உடல் வலுவுற்றால் உள்ளமும் வலுவுறும்.

<u>பொன்மொழி</u>

உங்களுக்கு எவ்வளவு தெரியும் என்பது முக்கியமல்ல; உங்களுக்குத் தெரிந்ததைக் கொண்டு எவ்வளவு செய்து முடித்தீர்கள் என்பது தான் மிக முக்கியமானது.

<u>இரண்டொழுக்க உறுதி மொழி</u>

1. மனித நேயமே உலகில் மகத்தானது. அனைவரிடத்திலும் அன்பு காட்டுவேன்.
2. கல்வி கற்பதே என் தலையாய கடமை. கடமையை என் கண்ணாய் கருதுவேன்

<u>இன்றைய பொது அறிவு வினா விடை</u>

1. கைரேகையை பயன்படுத்தி குற்றவாளியை கண்டுபிடிக்கும் முறையை கண்டுபிடித்தவர்? எட்வர்ட் ஹென்றி
2. தொலைபேசி .................... என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது? அலெக்சாண்டர் கிராகாம் பெல்

**தினமும் ஆங்கிலம் கற்றுக் கொள்வோம்**

We have plenty of time ? நமக்கு நிறைய நேரம் இருக்கிறது.

There’s no hurry. அவசரம் இல்லை



# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி

# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

வரலாற்றில் இன்று :

- அசாம் மாநிலம், அசோம் என பெயர் மாற்றப்பட்டது(2006)
- கொலம்பியா 16 விண்ணோடம் ஏவப்பட்டது(1994)
- எமிலி பேர்லீனர், மைக்ரோபோனைக் கண்டுபிடித்தார்(1877)
- பிரிட்டனின் முதலாவது மின்சார டிராம் வண்டி, கிழக்கு லண்டனில் ஓடவிடப்பட்டது(1882)
- சீன வானியலாளர்கள் முழுமையான சூரிய கிரகணத்தை கண்டறிந்தனர்(1275)

### இன்றைய செய்திகள்

- கொரோனா மூன்றாவது அலை படிப்படியாக கட்டுப்படுத்தப்பட்டு வரும் நிலையில் நான்காவது அலை மே மாதத்தில் பரவும் என்று பஞ்சாப் மாநிலம் லூதியானாவில் உள்ள கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.
- நகர்புறத் தேர்தலில் வெற்றி பெற்ற வேட்பாளர்கள் இன்று தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தலுக்கு பின் பதவியேற்கின்றனர். தி.மு.க வேட்பாளர்கள் 20 மாநகராட்சிகளில் மேயராக இன்று பதவியேற்கின்றனர். போடிநாயக்கனூர் நகராட்சியில் திருமதி.இராஜ ராஜேஸ்வரி சங்கர் அவர்கள் நகராட்சித் தலைவராக பொறுப்பேற்கிறார்.
- சென்னை மேயராக பட்டியலினத்தைச் சார்ந்த பிரியா ராஜன் வயது 28 மேயராக பொறுப்பேற்கிறார்.
- டாஸ்மாக் மதுக்கடையைத் திறக்க அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்தால், அதை பரிசீலித்து கடையை திறக்கக்கூடாது என சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.
- உக்ரைன்—ரஷ்யா இடையிலான போர் எட்டாவது நாளாக நீடித்து வருகிறது. ரஷ்யா வான்வழி தாக்குதலை தீவிரப்படுத்தயுள்ளது.
- தமிழக மாணவர்களை மீட்க 4 பேர் கொண்ட குழுவை முதல்வர் மு.க.ஸ்டாலின் அமைத்துள்ளார்.